செ.வெ.எண்: 71

22/1/2011

## பத்திரிக்கைச் செய்தி

போக்குவரத்து பணியாளர்களுக்கு புதிய சம்பள ஒப்பந்தம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 08.01.2011 அன்று இறுதி பேச்சு வார்த்தை நடத்தி முடிவு செய்யப்பட்டு தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை மற்றும் நிர்வாகத் தரப்பில் நிர்வாக இயக்குநர்கள் தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரச ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் வாயிலாக போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 552 கோடி அளவிற்கு பணப்பலன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சங்கப் பேரவையின் கோரிக்கைகளான ஓய்வூதியம் சீரமைத்தல், பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குதல், சம்பள விகிதத்தினை முறைப்படுத்துதல் மற்றும் விருப்பார்ந்த ஓய்வு நிபந்தனைகளை தளர்த்தி பரிசீலித்தல் மற்றும் பணியாளர் விகிதம் மாற்றியமைத்தல் போன்றவற்றிற்கு அரசு மட்டத்தில் அதிகாரிகள் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழு அமைத்து பரிசீலித்து வரும் 25–01–2011ம் தேதிக்குள் பரிந்துரை பெற்று நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து குழுவின் பரிந்துரை 21.01.2011 அன்று பெறப்பட்டு அதன் அடிப்படையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தொழிலாளர் தனித்துணை ஆணையர் முன்னிலையில் கலந்துரையாடல் நடைபெற்று சுமுகமான முடிவு எட்டப்பட்டு 22.01.2011 அன்று ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இவற்றின்படி போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு தேர்தலால் அங்கீகரிக்கப்பட்ட தொ.மு.ச பேரவையின் கோரிக்கைகளை அரசு ஏற்று அரசு ஊழியர் ஊதிய விகிதத்தைப் போன்ற ஊதிய முறையில் புதிய ஒப்பந்த ஊதியம் வழங்க முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது காறும் போக்குவரத்து வரலாற்றில்

இல்லாத அளவிற்கு இந்த புதிய சம்பள விகிதத்தால் போக்குவரத்து பணியாளர்கள் இதுவரை பெற்று வந்த ஊதிய நிலை மாறி அரசு ஊழியர் போல் சம்பள விகிதம் பெற்று மாபெரும் பயன் அடைகிறார்கள். சொன்னதை செய்யும் இந்த அரசு மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி இச்சாதனை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

# Annexure-1

PAY BAND AND GARDE PAY EFFECTIVE FROM 1.9.2010

| SL NO | Category | Old Scale | Pay Band effective from 1.9.2010 | Grade Pay |
|---|---|---|---|---|
| 1 | Miscellaneous-Level 1 | 5285–90–7985 | 4800 – 10000 | 1300 |
| 2 | CONDUCTOR,TECH- LEVEL-1 AND Miscellaneous- LEVEL 2 | 5305–90–6025–100–8225 | 5200–20200 | 1600 |
| | DRIVER- LEVEL 1 | 5335–90–6055–100–8255 | | 1700 |
| 3 | Admn-LEVEL-1 ,CONDUCTOR,TECH- LEVEL-2 AND Miscellaneous- LEVEL 3 | 5435–115–8885 | 5200–20200 | 1800 |
| | DRIVER LEVEL-2 | 5455–115–8905 | | 1900 |
| 4 | Admn-LEVEL-2 CONDUCTOR,TECH- LEVEL-3 AND Miscellaneous--LEVEL 4 | 5505–115–6655–120–9055 | 5200–20200 | 2000 |
| | DRIVER LEVEL-3, | 5525–115–6675–120–9075 | | 2100 |
| 5 | CONDUCTOR.TECH- LEVEL-4 AND Miscellaneous-Level 5 | 5555–135–6500–145–9835 | 5200–20200 | 2200 |
| | Admn-LEVEL-3 | 5645–135–6590–145–9925 | | 2250 |
| | DRIVER LEVEL 4 | 5575–135–6520–145–9855 | | 2300 |
| 6 | Admn-LEVEL-4 | 5665–180–6565–190–11315 | 5200–20200 | 2400 |
| | CONDUCTOR, TECH- LEVEL-5 AND Miscellaneous- Level 6 | | | 2450 |
| | DRIVER LEVEL 5, | | | 2500 |
| 7 | Admn-LEVEL-5 | | 9300–34800 | 4200 |
| | CONDUCTOR , TECH LEVEL 6 | | | 4200 |
| | DRIVER LEVEL 6 | | | 4200 |
| 8 | Admn-LEVEL-6 | | 9300–34800 | 4300 |
| 9 | Supervisory | 6190–180–7450–190–11820 | 9300–34800 | 4400 |
| | | 6535–225–8110–235–13515 | | 4500 |
| | | 6940–270–8830––280–15270 | | 4600 |

This is for matching Scale of pay only